சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 198/2022

பெயர். திருமதி. விஜயலட்சுமி                நாள்.28.08.2025
க/பெ.

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1) என் கணவரின் வாரிசு சான்றிதழ் ம.த.சா.ஆ.10. என் மகனின் ஆதார் அட்டை நகல் பி.த.சா.ஆ.11. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசரணை

2) ம.த.சா.ஆ.2, இறப்புச் சான்றிதழ் மற்றும் மரண அறிக்கை படி என் கணவருக்கு விபத்து தேதியில் வயது 36 என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் என் கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால்தான் இறப்பு ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்ததாக முதல் விசாரணை மற்றும் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் மீது இடித்ததாக கூறப்படும் வாகனம் டிப்பர் வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் தகுதிச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.